அனுப்புநர்
ஏ.சிவக்குமார் D.M.E., B.Com.,
ஆணையாளர்,
ஊராட்சி ஒன்றியம் ,
காட்டாங்கொளத்தூர்.

பெறுநர்
ஊராட்சி மன்றத் தலைவர்,
நெடுங்குன்றம் ஊராட்சி,
காட்டாங்கொளத்தூர் ஊராட்சி ஒன்றியம்.

ந.க.எண்.0020/2024/அ4 நாள்.18.01.2024.

ஐயா / அம்மையீர்,

பொருள் - திட்ட வரைபட அனுமதி - செங்கல்பட்டு மாவட்டம் - வண்டலூர் வட்டம் - காட்டாங்கொளத்தூர் ஊராட்சி ஒன்றியம் - நெடுங்குன்றம் ஊராட்சி - நெடுங்குன்றம் கிராமம் - CMDA- Area Plans Unit - Layout Division - Planning Permission - Proposed Laying out of house sites in land comprised in S.No.446/4A, 5, 6 & 7A, 447/1B1, 449/1A3A1, (1A3A1A as per patta), 450/2A1 and 466/1 &2 of Nedugundram Village - மனைப்பிரிவு வரைபட அனுமதி வழங்கப்பட்டுள்ளது - மேல்நடவடிக்கைக்காக அனுப்பி வைத்தல் - சார்ந்து.

பார்வை - 1.உறுப்பினர் செயலர், சென்னை பெருநகர வளர்ச்சி குழுமம், 1, காந்தி இர்வின் சாலை, எழும்பூர், சென்னை - 600 008. அவர்களின் கடித எண்.Letter No.Layout-1/0336/2023, நாள்.08.01.2024.
2.G.O.(ms).No.181, Housing and Urban Development {UD4(1)} Department dated 09.12.2020.
3.தொடர்புடைய ஆவணங்கள்.

****

பார்வை 1-இல் காணும் உறுப்பினர் செயலர், சென்னை பெருநகர வளர்ச்சி குழுமம் அவர்களின் கடிதத்தின்படி, செங்கல்பட்டு மாவட்டம், வண்டலூர் வட்டம், காட்டாங்கொளத்தூர் ஊராட்சி ஒன்றியத்திற்குட்பட்ட நெடுங்குன்றம் ஊராட்சி, நெடுங்குன்றம் கிராமம், சர்வே எண். S.No.446/4A, 5, 6 & 7A, 447/1B1, 449/1A3A1, (1A3A1A as per patta), 450/2A1 and 466/1 &2 -இல் M/S.SSM Buildiers & Promoters and M/S.Elephantine Enterprises Private Limited Rep by its Authorized Signatory of Thiru.S.Goudhaman GPA behalf of M/S.SSM Builders & Promoters Chennai 600 041 என்பவருக்கு மனைப்பிரிவு திட்ட வரைப்பட அனுமதி வழங்கி உத்தரவிடப்பட்டுள்ளது.

மேற்படி, நெடுங்குன்றம் ஊராட்சி, நெடுங்குன்றம் கிராமம், சர்வே எண். S.No.446/4A, 5, 6 & 7A, 447/1B1, 449/1A3A1, (1A3A1A as per patta), 450/2A1 and 466/1 &2 -இல் திட்ட அனுமதி அளிக்கப்பட்ட வரைப்படங்கள் மற்றும் அனுமதி சீட்டு (Permit) அசலாக இத்துடன் இணைத்து அனுப்பி வைக்கப்படுகிறது. மனுதாரர் ஊராட்சிக்கு செலுத்த வேண்டிய அனுமதி கட்டணங்களை செலுத்திய பின்னர், இறுதி ஒப்புதல் வழங்க தெரிவிக்கப்படுகிறது.

பார்வை 2ல் காணும் அரசாணையின்படி மனைபிரிவில் உள்ள சாலையினை ஊராட்சியின் பொது உபயோகத்திற்கு, தானமாக ஆணையாளர் காட்டாங்கொளத்தூர் ஊராட்சி ஒன்றியம் என்ற பெயரில் தானபத்திர எண்.9943/2023 நாள்.27.12.2023 தாம்பரம் சார் பதிவு அலுவலகத்தில் பதிவு செய்யப்பட்ட தானபத்திரம் இத்துடன் இணைக்கப்பட்டுள்ளது. எனவே, பார்வை 1ல் காணும் கடிதத்தில் பத்தி எண் 5ல் தெரிவித்துள்ள நிபந்தனைகளுக்குட்பட்டு இறுதி வரைப்பட அனுமதி வழங்கிடுமாறு ஊராட்சி மன்றத் தலைவர் கேட்டுக்கொள்ளப்படுகிறார்.

நிபந்தனைகள் -

1.திட்ட அனுமதி வழங்கப்பட்ட மனைப்பிரிவில் தார்சாலை அமைக்கப்பட வேண்டும்.
2.சாலைகளின் இருபுறங்களிலும் மழைநீர் வடிகால்வாய் (CC Drain) அமைக்கப்பட வேண்டும்.
3.இணைப்பு சாலைகளில் கல்வெர்ட் அமைக்கப்பட வேண்டும்.

இணைப்பு -

1.திட்ட அனுமதி அளிக்கப்பட்ட வரைபடங்கள் (அசலாக)
2.திட்ட அனுமதி சீட்டு (Permit) (அசலாக)
3.தனாபத்திர நகல் (Xerox Copy)

18/1/24

ஆணையாளர்,
ஊராட்சி ஒன்றியம்,
காட்டாங்கொளத்தூர்.

18/01/2024

/Planner System / D/ CMDA/A4-system-4/Lrs./

நகல்

1.M/S.SSM Buildiers & Promoters and
M/S.Elephantine Enterprises Private Limited
Rep by its Authorized Signatory
of Thiru.S.Goudhaman GPA behalf of
M/S.SSM Builders & Promoters
No.3A, Kathiravan Salai, Neelangarai Chennai 600 041

2.உறுப்பினர் செயலர், சென்னை பெருநகர வளர்ச்சி குழுமம், சென்னை அவர்களுக்கு தகவலுக்காக பணிந்தனுப்பப்படு கிறது.

3.வட்டார வளர்ச்சி அலுவலர் (கி.ஊ), காட்டாங்கொளத்தூர் ஊராட்சி ஒன்றியம் அவர்களுக்கு தகவலுக்காக.

நெடுங்குன்றம் ஊராட்சி தலைவர் அவர்களின் செயல் முறைகள்

முன்னிலை–திருமதி. சீ.வனிதா ஸ்ரீ அவர்கள்

ந.க.09/2023-2024 நாள்: 01.02.2024

பொருள்: மனைபிரிவு வரைபடம் காட்டாங்கொளத்தூர் ஒன்றியம் - நெடுங்குன்றம் ஊராட்சி – நெடுங்குன்றம் கிராமம் **சர்வே எண்**:446/4A,5,6 &7A,447/1B1,449/1A3A1,(1A3A1A as per patta),450/2A1and466/1&2 **மனை எண்கள்**: 76Nos **M/s** SSM Builders & Promoters and M/s.Elephantine Enterprises Private Limited Rep by its Authorized Signatory of Thiru S.Goudhaman GPA behalf of M/s SSM Builders & Promoters,No 3A, kathiravan Salai, Neelangarai, Chennai 600041 என்பவருக்கு மனைபிரிவு அனுமதி வழங்குதல் தொடர்பாக.

பார்வை:

1. சென்னை பெருநகர் வளர்ச்சிக் குழுமம், சென்னை – 8 அவர்களுக்கு கடித எண். மற்றும் இவ்வலுவலக குறிப்புகள்
2. ஆணையர் காட்டாங்கொளத்தூர் **ந.க**.எண்: 0020/2024/அ4/ நாள்: 18.01.2024
3. மனுதாரர் கடிதம் நாள்: 29.01.2024.
4. ஊராட்சி பலவகை ரசீது எண் 19271 நாள்: 01.02.224 ரூபாய்: 1144352 /-

உத்தரவு:

பார்வையில் காணும் கடிதத்துடன் பெறப்பட்ட வரைபடங்கள் பரிசீலிக்கப்பட்டு மணை பிரிவு செய்து கீழ்கண்டவாறு கட்டிட மற்றும் மணை பிரிவு விதிகளுக்கு உட்படுத்த ஒப்புதல் அளிக்கப்படுகிறது.

1. மனைகள் மற்றும் தெருக்கள் அங்கீகரிக்கப்பட்ட வரைபடத்தின்படி எல்லை கற்களால் வரையறுக்கப்பட வேண்டும். மனைப்பிரிவிற்குள் வரும் தெருக்கள் அனைத்தும் சரளைக் கற்களை கொண்டு மனுதாரர்கள் நிர்வாக அதிகாரிகளால் நிர்ணயிக்கப்படும் மட்டத்திற்கம் அகலத்திற்கும் அமைக்கப்பட வேண்டும். அதோடு தகுந்த சிறு பாலங்கள் , சாக்கடை, வடிகால் துப்புரவு, தெருவிளக்கு முதலிய வசதிகளும் மனுதாரர் அமைத்துத்தர வேண்டும். மனையின் அளவுகளில் அமைப்பில் மாற்றங்கள் செய்வதோ அல்லது வரையறுக்கபட்ட பொது உபயோகத்திற்கான இடங்களில் மாறுதல் செய்வதோ கூடாது.
2. தெரு முனையில் அமையும் மனைகளில் முனைகள் அங்கீகரிக்கப்பட்ட வரைபடத்தின்படி திருப்பத்தோடு அமைக்கப்பட வேண்டும்.
3. அங்கீகரிப்பட்ட வரைபடத்தில் விடப்பட்டுள்ள எந்த ஒரு மனையையும் பொது காரியங்களுக்காக தேர்வு செய்யப்பட்ட மனைகள் தவிர குடியிருப்பு வீடு கட்டுவதற்கு மட்டுமே பயன்படுத்த வேண்டுமல்லாது கடை, பண்டகசாலை மற்றும் குடியிருப்பு அல்லாத குடியிருப்பைச் சொந்த உபயோகத்திற்கல்லாத கட்டிடம் கட்டுவதற்கு பயன்படுத்தகூடாது.
4. எந்த ஒரு மனையிலும் தனித்தொரு குடியிருப்பு மட்டுமே கட்டப்பட வேண்டும் தவிர எக்காலத்திலும் கட்டிடம் மனைகளில் அங்கீகரிக்கப்பட்ட அளவுகளையோ, அகைப்பையோ மாற்றப்படுத்தும் வகையில் எந்த மனையும் திருத்தி அமைப்பதோ உட்பிரிவளிப்பதோ மாறுபட்ட உபயோகத்திற்கு பயன்படுத்தகூடாது.
5. அங்கீகரிக்கப்பட்ட வரைபடத்தில் காட்டப்பட்டுள்ள தெருக்களுக்கு கட்டிட வரம்பு 10 அடிக்கு குறையாமல் இருக்க வேண்டும் மனையின் எல்லைக்குள் கட்டிட வரம்புக்குட்ப்பட்ட நிலப்பகுதியின் தெருவில் உயர் மட்டத்தில் இருந்து 5 அடி உயரத்திற்கு மேற்படாது. சுற்றுச்சுவர் அல்லது வேலை தவிர வேறு எந்த கட்டிடமோ சுவரோ கட்டக்கூடாது.
6. மனையின் பின்புறம் எல்லைக்குள் கட்டிடத்திற்கும் இடையில் மொத்த அகலத்திறிகும் வியாபிக்கின்ற வகையில் குறைந்தது 15 அடி அளவு உள்ள திறந்தவெளி இருக்க

வேண்டும். இந்த பின்பக்க திறந்தவெளியில் கிணறு, மல அறை, எரு குழி, மாட்டுத்தொழுவம் , உந்து வண்டியை நிறுத்த கொட்டகை சார்ந்த கட்டிடங்கள் மட்டுமே அனுமதிக்கலாம். ஆனால் அக்கட்டிடங்கள் மொத்தமாக பின் எல்லையில் நிலத்தில் மூன்றில் ஒது பாகத்திற்கு மேற்படாமலும் இருக்க வேண்டும்.

7. ஊராட்சி நிபந்தனைகளுக்குட்பட்டு வழங்கப்படுகிறது.
8. கடக்கால் பேர்ட தேவையான அளவிற்கு அதிகமாக தரைகளை சமப்படுத்த வேண்டும். நிலச்சரிவை நேர் செய்யவோ மனையிலிருந்து மண் தோண்டி எடுத்து பள்ளங்கள் கழனி ஏற்படுத்தக் கூடாது.
9. மனையின் சொந்தகாரர்கள் மேற்படி வீடு கட்டும் திட்டங்களுக்கு உட்படுத்துவதாக எழுத்து மூலமாக சம்மந்தப்பட்ட ஊராட்சி ஒன்றிய அதிகாரியிடம் ஒப்பந்தம் செய்து கொள்ள வேண்டும். மனைகள் விற்பவரையம் மற்றும் வாங்குபவரையும் கட்டுப்படுத்தும் வகையில் கட்டுதிட்டங்கள் விற்பனை பத்திரங்கள் பகுதியாக சேர்க்கப்பட வேண்டும்.
10. அங்கீகரிக்கபட்ட மணைப்பிரிவு வரைபடம் இத்துடன் இணைக்கப்பட்டுள்ளது.

இணைப்பு: மனைபிரிவு **வரைபடம்**

பெறுநர்:

M/s SSM Builders & Promoters and M/s.Elephantine Enterprises Private Limited
Rep by its Authorized Signatory of Thiru S.Goudhaman GPA behalf of
M/s SSM Builders & Promoters,No 3A, kathiravan Salai, Neelangarai, Chennai 600041

நகல்: செயலாளர்
சென்னை பெருநகர வளர்ச்சிக்குழுமம்
சென்னை 600 008.

தலைவர்
நெடுங்குன்றம் ஊராட்சி